செ.வெ.எண்.118/2018 நாள்: 19.03.2019

# காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.17.00 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்டஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டஆட்சித்தலைவர் அலுவலகவளாகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்டஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில்நடைபெற்றது.

இம்முகாமில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 20 பயனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்பு தொடங்க ரூ.14.60 லட்சம் மதிப்பிலான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

பின்னர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் வையாவூர், தர்மநாயக்கன்பட்டறையைச் சார்ந்த மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள் எம்.ஆகாஷ் என்பவருக்கு ரூ.3500 மதிப்பிலான சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

மேலும் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம், திருபெரும்புதூர் மற்றும் செங்கல்பட்டு வட்டத்தைச் சேர்ந்த இருளரின குடும்பத்தை சார்ந்த 8 பயனாளிகளுக்கு தொழில் உதவிக்காக தலா ஒருவருக்கு ரூ.30 ஆயிரம் மானியம் வீதம் ரூ.2.40 லட்சம் மதிப்பிலான இருசக்கர வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சமூக பாதுகாப்புத் திட்டம் தனித்துணை ஆட்சியர் திரு.சக்திவேல், ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.தமிழ்ச்செல்வி, மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் திரு.சக்திவேல் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்திவெளியீடு**

செய்திமக்கள் தொடர்புஅலுவலர்

காஞ்சிபுரம்.